**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

**அசல் வழக்கு எண்.03/2018**

2023-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14-ம் நாள் திங்கள்கிழமை சாட்சியங்களின் PW-1-ன் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டு சட்டம் 44-ன் ஏற்பாட்டின்படி திருமதி ச. சிந்தா, பி.ஏ., பி.எல்., (HONS) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குணசேகரன் | த/பெ. | : | ஜெகநாதன் |
| தொழில் | : | | வயது | : | 55 |
| கிராமம் | : | | வட்டம் | : | |
| ஜாதி | : | | மதம் | : | |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதியாவேன். இவ்வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். எனது தரப்பு முதல்விசாரணையை பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். (வாதியின் தந்தை ஜெகநாதனின் இறப்பு சான்றிதழின் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், வாதியின் தாயார் சாமியம்மாளின் இறப்பு சான்றிதழின் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், வாதி பெயரில் பாபநாசம் வட்டாட்சியரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் அசல் **வா.சா.ஆ.3** ஆகவும், வாதியின் தந்தையார் பெயரில் தாவா சொத்திற்கு வழங்கப்பட்ட பட்டாவின் அசல் **வா.சா.ஆ.4** ஆகவும், வாதி பெயரில் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீதின் அசல் (எண்ணிக்கை -2) **வா.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)

முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.